**<u>நாள் 10.07.2023.</u>**

**<u>OS 27/2022 வா.சா 1 சாட்சி ஜெகதீஸ் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என் வழக்கறிஞருக்கு இந்த வழக்கு சம்பந்தமாக விவரங்கள் சொன்னது நான்தான். வழக்குரை பத்தி 3ல் 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தை பற்றி சொல்லியிருக்கின்றேன். அந்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. வாசாஆ1ல் 04.04.1960 தேதியிட்ட பத்திரம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய அப்பா கிரயம் வாங்கிய வாசாஆ 2ல் 04.04.1960 தேதியிட்ட பத்திரம் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் கமலத்தம்மாள் பெயர் இருக்கிறது. நாங்கள் வாங்கிய சொத்திற்கு மூலப்பத்திரம் என்றால் அது வாசாஆ 1 தான். அதற்கு முன்யு ஏற்பட்ட பத்திரம் 04.04.1960ல் கமலத்தம்மாள் பெயரில் ஏற்பட்ட பத்திரம் ஆகும். பரவைநாச்சியார் கமலத்தம்மாளிடம் கிரயம் வாங்கினார். வழக்குரை பத்தி 3ல் சொல்லியுள்ள விவரங்கள் 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தை பார்த்துதான் சொல்லப்பட்டுள்ளது. சொத்தை என் அப்பா வாங்கும் போது எனக்கு வயது 12. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்தை அளந்து பார்த்தேன். வழக்கு சொத்து விவரத்தில் சரியான அளவை குறிப்பிடாமல் கம்மி ஜாஸ்தி என்று போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பொதுவாக கம்மி ஜாஸ்தி என்றால் கூடக்குறைய வரலாம் என்று அர்த்தம். வழக்கு சொத்து ZIGZAG முக்கோணவடிவில் இருப்பதால் அவ்வாறு சொல்லியிருக்கிறோம் என சாட்சி தன்னிச்சையாக சொல்கின்றார். வாசாஆ 2ல் சொத்துவிவரத்தில் முக்கோணவடிவில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. பத்திரத்தில் ZIGZAG என்று சொல்லப்படவில்லை. என்னுடைய சொத்திற்கு 2 பாதைகள் இருக்கிறது. சொத்திற்கு வடக்கிலும், மேற்கிலும் ஒரே பாதை இருக்கிறது. அந்த பாதை யார்அமைத்த பாதை என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு மேற்குபுறம் ஜானி மு பாண்டியன் என்பவரது சொத்து உள்ளது. அந்த பத்திரத்தை வாங்கி பார்த்திருக்கிறேன். அதை தாக்கல் செய்திருக்கின்றேன். 04.04.1960 தேதியிட்ட கமலத்தம்மாள் பெயரில் ஏற்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தில் வடக்கு எல்லை என்ன என்று எனக்கு தெரியாது. பரவை நாச்சியாருக்கு முன்பு ஏற்பட்ட பத்திரத்தின் நான்கெல்லை தெரியாது. வாசாஆ1ல் வடக்கு எல்லை மெடிக்கல்காலேஜ்ரோடு பழைய தஞ்சாவூர் திருச்சி ரோடு. 04.04.1960 தேதியிட்ட கமலத்தம்மாள் பெயரில் ஏற்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தை நகல் வாங்கி பார்க்கவில்லை. நானும் பிரதிவாதியும் ஒரே சொத்திற்கு உரிமை கேட்கிறோம் என்றால் எங்கள் சொத்திற்கு பிரதிவாதி உரிமை

கேட்கிறார். 04.04.1960 பத்திரத்தில் A ஷெட்யூல் சொத்தை கமலத்தம்மாளுக்கும் D ஷெட்யூல் சொத்தை பொன்னுசாமிக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் என்னிடம் இருக்கிறது. அந்த பத்திரத்தின் சொத்துவிவரத்தை நான் சர்வேயர் வைத்து அளந்து ஒப்பாய்வு செய்ய முயற்சிக்கவில்லை. 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் என்னிடம் இருப்பதை நான் தாக்கல் செய்யவில்லை. 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தின் பதிவு அலுவலக நகல் என்னிடம் காட்டப்படுகிறது. அதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. அது போலியாக(Fabricated) ஏற்படுத்தப்பட்டிருக்கும். நான் என்னிடம் காட்டப்படும் பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. என்னிடம் உள்ள ஜெராக்ஸ் காப்பியில் கமலத்தம்மாளுக்கு A ஷெட்யூல் சொத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னிடம் இருக்கும் ஜெராக்ஸ் காப்பியில் A ஷெட்யூலில் வழக்கு சொத்திற்கு நான்கெல்லை மெடிக்கல்காலேஜ்ரோட்டிற்கு தென்புறம். அந்த ஜெராக்ஸ் காப்பி நான் வாங்கவில்லை என் அப்பா காலத்திலிருந்து 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் இருக்கிறது. அந்த ஜெராக்ஸ் காப்பியை அடுத்த வாய்தாவில் நான் தாக்கல் செய்கிறேன். பொன்னுசாமி மூப்பனார் கிரயம் செய்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது EC போட்டு தெரிந்துகொண்டேன். சுப்பிரமணியபிள்ளைக்கு விற்றது எனக்கு நேரடியாக தெரியாது. சுப்பிரமணியபிள்ளை உயிருடன் இருக்கிறாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது. அவரது குடும்பத்தில் யாரேனும் உயிருடன் இருக்கிறார்களா என்று தெரியாது. EC யில் காட்டப்பட்ட பின்னால் கிரயம் வாங்கியவர்களில் டாக்டர் சுந்தரை விசாரித்தேன். பொன்னுசாமி ராஜகோபாலுக்கு மைத்துனர். பொன்னுசாமி வழக்கு சொத்து 32 சென்ட்டை விற்றாரா என்றால் அவருக்கு அதில் உரிமை இல்லை அதனால் அவர் விற்கவில்லை. 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தில் இந்த வழக்கு சொத்து கமலத்தம்மாளுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அந்த பத்திரத்தில் பொன்னுசாமிக்கு கொடுக்கப்பட்டு அதை அவர் விற்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கமலத்தம்மாளுக்கு இந்த வழக்கு சொத்தை பரவைநாச்சியாருக்கு விற்பதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. சொத்தின் சுவாதினம் என்னிடம் இல்லை என்பதால்தான் சரியான அளவை குறிப்பிடாமல் கம்மி ஜாஸ்தி என சொல்லியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. வாசாஆ 18 ல் 1391 தொகுதி எண் உடைந்து கிழிந்த நிலையில் உள்ளதால் நகல் எடுக்க இயலாது என

தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 18 ற்கான நகல் கேட்டு மனு எனது நண்பர் ஸ்ரீதர் தாக்கல் செய்துள்ளார். ஸ்ரீதர் கம்யூட்டர் சென்டரில் இருப்பவர். வாசாஆ 18 ல் உள்ள ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் எனக்கு ஸ்ரீதர் கொடுத்தது. ஸ்ரீதரின் அப்பா பெயர், விலாசம் எனக்கு தெரியாது. ஸ்ரீதர் எனக்கு நண்பர் என சொல்லியிருக்கின்றேன் ஆனால் அவர் எங்கு வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவர் கம்யூட்டர் சென்டரில் இருப்பவர். ஸ்ரீதரை நான் சாட்சியாக விசாரிக்கலாம். வாசாஆ 18 ல் கண்ட ஆவணத்தை நான் Fabricated செய்து பதிவு அலுவலக சான்றுடன் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் இல்லை. வாசாஆ 18 ஜெராக்ஸ் ஆவணம் உண்மையா பொய்யா என்று ஸ்ரீதரைத்தான் கேட்கவேண்டும்.

04.04.1960 தேதியிட்ட பத்திரத்தின் ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்வதற்காக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.